REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 17உ திங்கள் (3—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 18உ செவ்வாய் (4—10—55) [இதழ் 94

போலீஸ் - இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு பெண்கள்!

கோலாலம்பூர், அக். 2—

36 பெண் போலீஸ்-இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு 4 சீக்கிய மாதர்கள் மனுச் செய்துகொண்டுள்ளனர். மொத்தம் 12 இந்தியர்கள் இதற்கு மனுப் போட்டனராம்! இதில், 6 குழந்தைகளுக்குத் தாயான 31 வயது மாதும் ஒருவராம்!

சூடு தணிகிறதாம்! இதம் கிடைக்கிறதாம்!

இந்தி எதிர்ப்பு அர்த்தமற்றதாம்!

இந்திக்கும் தமிழுக்கும் மோதுதல் என்பது மதியீனமாம்!

பண்டிதரின் வழக்கமான வசைமாரி!

"இந்திக்கு எதிராக இங்கு சிலர் கிளர்ச்சியில் ஈடுபட்டதை அறிய நான் வருந்துகிறேன்; அந்தக் கிளர்ச்சி அர்த்தமற்றது; ஏனெனில், இந்தியைத் திணிக்கவேண்டும் என்று எவரும் விரும்பவில்லை;

"இந்தி மொழி அறிவு பெறுவது எல்லோருக்கும், எல்லா வகையாலும் இலாபகரமானதாகவே இருக்கும்;

"அரசியல் சட்டத்தில் 12 அல்லது 13 மொழிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவை எல்லாம் தேசிய மொழிகள் என்றே கருதப்படவேண்டும்;

"அவற்றில் பல, உங்கள் சொந்த தமிழ் மொழியைப் போல பழங்கால மொழிகளாகும். அவைகள் எல்லாம் உண்மையில் தேசிய மொழிகள்தாம்;

"அதே நேரத்தில் அரசியல் சட்டத்தில், இந்தி இந்தியாவின் அலுவல் மொழியாக இருக்கும் என்றும் குறித்திருக்கிறோம் அதனாலேயே, தமிழ், குஜராத்தி, மராத்தி, வங்காளி, தெலுங்கு போன்ற மொழிகளைவிட, இந்தி அதிகமான தேசிய கௌரவம் பெற்ற மொழியாகவிடவில்லை.

"இந்தியாவின் பல தேசிய மொழிகளினூடே, இந்தி, பல காரணங்களால், அகில இந்திய அலுவல்களுக்கு சுலபமாக ஏற்றுக்கொள்ளப்பட முடிந்த மொழியாக இருக்கிறது என்பதுதான் உண்மை;

"தமிழுக்கும் இந்திக்கும் இடையே மோதுதல்—என்பது தவறு;

"வேறு நாடுகளில், ஒவ்வொரு படித்த மனிதனும், இரண்டு, மூன்று மொழிகள் கற்றவனாகத் திகழுவதை நாம் காண முடியும்;

"எனவே, முதலில் உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புவது, இந்திக்கும்—தமிழுக்குமோ, அல்லது, தெலுங்குக்கும்—வேறு ஒரு மொழிக்குமோ மோதுதல் என்று எண்ணுவது மதியீனமானதாகும்;

"இந்தப் பகுதியின் சிறந்த மொழி தமிழ் மொழியாகும்; வடநாட்டவர் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; அதே நேரத்தில் நம்மிடையே ஒரு பொது மொழி தேவை; இல்லாவிட்டால், நாம் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள முடியாதவாறு, பல மொழித் தடைகள் ஏற்படும்;

"வேறு எந்த மொழியாலும் முடியாத காரியங்களைச் சாதிக்கவும், அலுவல் மொழியாக இருக்கவும்தான் இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது;

"வேறு எந்த மொழியையும் குறுக்கிடுகிற அளவுக்கு இந்தி மொழித் திணிப்பு என்பது இல்லை;

"இந்தி திணிக்கப்படுவதாக எண்ணுவது, தவறானது—மதியீனமானது;

"சர்க்கார் வேலைகளுக்கோ, அல்லது வேறெவற்றிற்கோ, இந்தி மொழி தெரியாதவர்களுக்குப் பெரும் சுமையாயிருக்கக் கூடிய எந்த ஒரு நடவடிக்கையையும் நாம் மேற்கொள்ளவில்லை;

"ஆங்கில மொழியும் நமக்கு உதவிகரமானதாயிருக்கக்கூடிய ஒரு மொழியாகும்; ஆனால், ஆங்கிலம் தேசிய மொழியாக தொடர்ந்து இருக்கமுடியாது;

"நாம் ஆங்கிலம் மட்டுமின்றி இதர வெளிநாட்டு மொழிகளையும் கற்றாக வேண்டும்; அந்த மொழிகள் தெரிந்த பலப் பலர் நமக்குத் தேவைப்படுகின்றனர்;

"நாம் இந்தியை மட்டுமின்றி, இதர மொழிகளையும் கற்றாக வேண்டும்; எந்த மொழியையும் புறக்கணிப்பது இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உகந்ததல்ல,"

என்று, பண்டித நேரு, சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

தனிது சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் பகுதியாக, சமுதாய நலத் திட்ட நிர்வாகம், சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில் ஏற்கனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் 375-ஐ ஏற்படுத்தியிருக்கிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய இரயில்வேக்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட ரூ. 400 கோடியில் 1955 ஜூன் 30-ந் தேதிவரை ரூ. 306,17,00,000 செலவு செய்யப்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வட நாட்டில் குழப்பமாம்— சென்னையில் குளிர்ச்சியாம்

பிரெஞ்சுக்காரரின் ஆதிக்க வெறி!

அல்ஜீரிய சிக்கலை ஐ. நா. விவாதிக்கக் கூடாதாம்!

நியூயார்க், அக். 2—

'அல்ஜீரியா சிக்கல் குறித்து முழுவதுமாக விவாதிப்பது,' என்று, ஐ. நா. பொதுச் சபை முடிவெடுத்திருக்கிறது.

இந்த முடிவுக்கு எதிர்ப்புக் காட்டுவதற்காக, ஐ. நா.-வில் உள்ள பிரெஞ்சுக் குழுவினர் வெளிநடப்பு செய்தனர்.

இதைத் தொடர்ந்து, பாரிஸ் சர்க்கார் உத்தரவின்பேரில், 'சபையைத் தற்காலிகமாகப் புறக்கணிப்பது,' என்று முடிவாகியிருக்கிறதாம்!

"இதனால், பாதுகாப்பு சபையிலிருந்தும் பிரான்சு வெளியேறிவிடுமா?" என்று கேட்டபோது, 'தெரியாது' என்று பிரெஞ்சுப் பிரதிநிதிக் குழு அலுவலகத்தவர் தெரிவித்திருக்கிறாராம்.

அயல்நாட்டு மந்திரி விளக்கம்

ஐ. நா. பொதுச் சபை முடிவை ஆட்சேபிக்கும் பொருட்டே, நடவடிக்கைகளிலிருந்து பிரான்சு விலகிக் கொண்டிருப்பதாகவும், 'இதனால், ஐ. நா.-வுடன் தன்னுடைய தொடர்பை, பிரான்ஸ் இறுதியாகத் துண்டித்துக் கொண்டது என அர்த்தமாகாது,' என்றும் பிரெஞ்சு அயல்நாட்டு மந்திரி பினே கூறியுள்ளார்.

பண்டித நேருவின் மயக்குமொழி

"நாம் பலவீனர்களாகவும், ஒழுங்கற்றவர்களாகவும் ஆகிவிடுவோமானால், வாழ்வதற்குக் கடினமாயுள்ள இந்த உலகம் நமக்கு இரக்கம் காட்டாது; நாம், இரக்கம் பெறத் தகுதியற்றுவிடுவோம்; நாம், தாழ்ந்துவிடுவோம்; ஒழுங்குள்ளவர்களாயும், பலமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டிய பொறுப்பை, எப்படி, இந்தியாவில் உள்ள ஆண்களும், பெண்களும், இளைஞர்களும், குழந்தைகளும் சுமந்துகொள்ளப் போகின்றனர்?

"என்னுடைய சொந்த நகரான அலகாபாத்திலேயோ, அல்லது பாட்னாவிலேயோ இளைஞர்கள் நடந்துகொள்ளும் முறையிலேயே வட இந்தியாவின் இதர பகுதி இளைஞர்களும் நடந்துகொண்டாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன்; அவர்கள் நடவடிக்கையில் 'எது சரி, எது தவறு' என்பது பற்றி நான் இங்கு குறிப்பிடப்போவதில்லை; யார் தவறு செய்தார்களோ, அவர்களைத் தண்டிப்போம்;

"ஆனால், இம்மாதிரி நடத்தை சிறுபிள்ளைத்தனமான முட்டாள்தனமாகும்; இந்த முட்டாள் தனத்தைச் சகித்துக் கொள்வது கடினமாயிருக்கிறது:

"அதனால்தான், குழப்பமான—கொந்தளிக்கிற நிலையில் உள்ள வட நாட்டிலிருந்து, இதமான சென்னை நகருக்கு வரும்போது, நான், எனது 'உஷ்ணம்' குறைந்திருப்பதாக உணருகிறேன்; ஏனெனில், சென்னையில் இதம் இருக்கிறது—நான் இங்கு வரும்போதெல்லாம் மகிழ்கிறேன்;

"இந்தியாவைப் பொறுத்து, நீங்கள்—சென்னைவாசிகள் மட்டுமின்றி, தென்கோடியிலிருப்போர் எல்லோரும் ஒரு பெரும் சுமையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகிறேன்—இப்போது நீங்கள் சுமக்கிற சுமையை மட்டுமின்றி, இந்தியாவின் இதர மாநிலங்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் பொறுப்பையும் சுமக்கவேண்டும் என்று விரும்புகிறேன்,"

—என்று பண்டித நேரு, நேற்று சென்னை பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'சாதிமுறைத் தடைகள் ஒழிய வேண்டும்'

'உடலுழைப்பைக் கேவலமாக எண்ணுவோர் நிந்தனைக்குரியோர்'

பெரம்பூர் விழாவில் பிரதமர் நேரு

சென்னை, அக். 2—

"இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ, அல்லது ரஷ்யாவிலோ, ஒரு எஞ்சினியர் நாற்காலியில் உட்கார்ந்தவண்ணம் உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருப்பதில்லை; ஆனால் இந்தியாவில் வேறெந்த நாட்டைக் காட்டிலும், உடலுழைப்பு செய்வோரை விட, உடலுழைப்புச் செய்யாமல் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருப்போர் உயர்ந்தவர் என்றெண்ணுகிற மனப்பாங்கு, பழக்கம் இருக்கிறது;

"ரஷ்யாவிலும், அமெரிக்காவிலும் மிகப் பெரிய மனிதர்கள் எல்லாம்கூட உழைக்கின்றனர்; ஆனால், இங்கு, நமது சாதீய பாரம்பரியமும், பிரிட்டிஷார் விட்டுச் சென்ற அலுவல் முறைகளும் நம்மிடம் எத்தனையோ வேறுபாடுகளை உண்டாக்கியிருக்கின்றன; இந்தப் பாகுபாடுகளை—தடைகளை நாம் ஒழித்தாக வேண்டும்;

தொழிற்சாலைகளில் உழைப்பதற்கு அலுவல் ரீதியான—அல்லது, சாதிமுறை ரீதியான வேறுபாடுகளும், தடைகளும் இருக்கக்கூடாது—இருக்க முடியாது;

"மேலும் நமக்குத் தேவையான பெரும் இயந்திரங்களை எல்லாம் நாமே தயாரித்துக் கொள்ளக்கூடிய பெரும் தொழிற்சாலைகள் இந்தியாவில் அமைந்தாக வேண்டும்,"

—என்று, பிரதமர் நேரு பெரம்பூர் முழு இணைப்பு இரயில் பெட்டிகள் தொழிற்சாலையில், உற்பத்தியைத் துவக்கி வைக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

தொழிற்சாலைக்குத் திருவிழாக் கோலம் பூட்டுவதற்காகப் பல்லாயிரம் ரூபாய் வாரியிறைக்கப்பட்டிருந்தது.

பிரதமர் நேரு பேசி முடித்துவிட்டு, பொத்தான் ஒன்றை அழுத்தி, முதல் பெட்டி உற்பத்தியைத் துவக்கி வைத்தார்.

இந்தத் தொழிற்சாலை, சுமார் ரூ. 7.5 கோடி செலவில் அமைக்கப்பட்டது என்று கூறப்பட்டது.

பண்டித நேரு தொடர்ந்து பேசுகையில், கிராமத் தொழில்களை வளர்ப்பதின்மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்ற காந்தியாரின் கோட்பாட்டிற்கும், பெரும் தொழிற்சாலைகள் துவங்கப்படுவதற்கும் முரண்பாடு எதும் இல்லை என்றும், இந்தியா தொழிற்சாலைகளை அமைக்க இதர நாடுகளை எதிர்பார்க்கும் நிலை மாறி, இங்கேயே நமக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் வாய்ப்பு ஏற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள 999 நிறுவனங்களில் சுமார் 62,000 பேர் தொழில் நுட்பப் பயிற்சி பெற்று வருகின்றனராம்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 3—10—'55 திங்கள்

'ஒலிபரப்பு'ம், 'ஒலிப்பதிவு'ம்!

அகில இந்திய வானொலியினர், வேதங்களை, வேதியர் பலரைக்கொண்டு பாராயணம் செய்யச் செய்து அவற்றை ஒலிப்பதிவு செய்யவிருக்கின்றனராம்!

முதலில், 'ரிக்வேதம்,' 'சாமவேதம்' ஆகியவற்றின் குறிப்பிட்ட சில பகுதிகள் ஒலிப்பதிவு செய்யப்படுமாம்!

வேத பாராயணத்திற்கு ஒரு ஆதாரமான 'தரம்' நிர்ணயிக்க வேண்டும் என்பதற்காகவும், ஒரு நிரந்தரப் பதிப்பு வேண்டும் என்பதற்காகவும், இந்த ஒலிப்பதிவு ஏற்பாடாம்!

காசியில்—கங்கை நதி ஓரத்தில் வேதமோதிக்கொண்டிருக்கும் 'விற்பன்னர்'களை எல்லாம் புதுடில்லியில் கூட்டி மாநாடு நடத்தி, 'வேதங்களில் எந்தப் பகுதியை ஒலிப்பதிவு செய்வது' என்பதை நிர்ணயிக்கப் போகின்றனராம்!

"இந்தத் 'திருப்பணி'யை வானொலி வெகுசீக்கிரமே மேற்கொள்ளவிருக்கிறது," என்று, இரண்டு நாள் முன்பு செய்தி வெளியாகியிருக்கிறது.

சவமொழி அறிவு மக்களுக்கு சிறிது சிறிதாகப் புகட்டப்படுகிறது— வானொலி மூலம்!

சாம, ரிக் வேதங்களைப் பாராயணம் செய்யச் சொல்லி ஒலிப்பதிவு செய்யப்படுகின்றது—வானொலியில்!

அகில இந்திய வானொலியினர் மேற்கொள்ளும் இரு 'திருப்பணி'கள் இவை!

இந்தியாவில் உள்ள கோடானுகோடி மக்களுக்கு, இப்பொழுது வானொலி செய்யக் கூடிய மிகச் சிறந்த சேவை எல்லாம், சவமொழிப் பிரச்சாரமும், வேதபாராயண ஒலிப்பதிவும்தான் என்று இந்தியப் பேரரசு கருதுகின்றது போலும்!

இந்தியாவில் உள்ள மக்களில் பெரும் பகுதியினர்—ஏறத் தாழ எண்பது சதவிகிதத்தினர் எழுத்தறிவற்றவர்—கல்வியறிவற்றவர்; இந்த மக்கள் எல்லாம் அவரவர்கள் தாய் மொழியிலேயே எழுதவும் படிக்கவும் தெரியாதவர்களாயிருக்கின்றனர்; இது சர்க்காரே வெளியிடும் புள்ளி விவரங்கள். அதே சர்க்கார், வழக்கொழிந்து சவமாகிவிட்ட ஒரு மொழியில் மக்கள் அறிவு பெற வேண்டும் என்று எதிர்பார்த்து, அதற்காக மக்கள் வரிப்பணத்தில் சில கோடி ரூபாயை விழுங்கும் பிரச்சார சாதனமான வானொலியைப் பயன் படுத்துவதை என்னென்று கூறிக் கண்டிப்பது?

ரிக் வேதம், சாம வேதம் ஆகியவற்றை ஒலிப்பதிவு செய்யப்போகின்றனராம்! யாருடைய நன்மைக்காக? எவருடைய கட்டாயத்திற்காக? என்ன அவசியத்திற்காக? யாது பலன் கருதி?—என்பனவற்றிற்கு, செய்தியில் போதுமான விளக்கம் இல்லை.

சவமொழியை ஒலிபரப்புவதும், வேதங்களை ஒலிப்பதிவு செய்வதையும் தவிர, மக்களுக்குத் தேவையானவற்றை வானொலி மூலம் செய்ய முடியாதா?

அகில இந்திய வானொலி, ஆட்சிபீடத்திலிருப்போரின் செயல்களைப் பாராட்டவும், நடவடிக்கைகளை விளமபரம் செய்யவும் மட்டுமே பயன் படுகிறது. நாட்டில், பொதுவாக, சிறப்புடைய நிகழ்ச்சிகள்— ஆட்சிபீடத்திலிருப்போராலோ, அல்லது அவர்களுக்கு வேண்டியவர்களாலோ நடத்தப்பட்டாலன்றி — வானொலியின் கண்களுக்குப் புலப்படுவதில்லை.

'ஆட்சியாளரின் குரலாகவே, மக்களின் பொதுச் சொத்தான வானொலி பயன் படுகிறது,' என்ற குற்றச் சாட்டு, ஏற்கனவே பரவலாகச் சுமத்தப்பட்டிருக்கிறது; அந்தக் குற்றச்சாட்டை மறுப்பதற்கு இதுவரையில் ஒலிபரப்பு இலாகாவினர் முயன்றதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில், இப்போது, சவமொழி ஒலி பரப்பும், வேத பாராயண ஒலிப்பதிவும் நடத்த முற்படுகின்றனர்.

எந்தச் சாதனத்தின் மூலம் இவர்கள் இறந்தனவற்றிற்கு உயிர் தர நினைக்கின்றனரோ, அந்தச் சாதனமான வானொலியைக் கண்டவர் எவர்? அது இயங்கும் முறை யாது?—என்பன போன்ற பொது அறிவைப் பெற்றில்லாத நிலையில் உள்ள மக்களின் உயர்வுக்கு உண்மையில் பாடுபட நினைப்போர், 'சவமொழி' ஒலிபரப்பும், வேதபாராயண ஒலிப்பதிவும் செய்யமாட்டார்கள்.

'நாட்டு மக்களுக்கு உலகத்தை உணர்த்தவும், பொது அறிவை ஊட்டவும், ஓரளவு பொழுதுபோக்கு வசதியைத் தரவும் பயன்படக்கூடிய விஞ்ஞான அறிவுக் கண்டுபிடிப்பான வானொலி, அகில இந்திய ஆட்சியாளர் போன்ற பிற்போக்குக் கும்பலின் கையில் சிக்கி, 'குரங்கு கைப்பூமாலை' யாக்கப் படுகிறதே,' என்றுதான், 'அறிவுலகம்' ஏசும். வேறு எல்லாத் துறைகளையும் போலவே இந்த ஒலிபரப்புத் துறையையும், இந்தியப் பேரரசினர், தங்கள் சுயநலத்திற்காகவும், விளம்பரத்திற்காகவும் மட்டுமே பயன்படுத்தி, பொது மக்கள் வரிப் பணத்தைப் பாழடிப்பது கண்டு, இந்த நாட்டு மக்கள் வாளாவிருக்கக் கூடாது.

'சவமொழி' ஒலி பரப்பும், வேதபாராயண ஒலிப் பதிவும், அறிவுள்ளோரின் கண்டனத்திற்குரியன என்பதை யாரே மறுக்க முடியும்?

16 இலட்சம் பேருக்கு பி. சி. ஜி. ஊசி!

'ஐதராபாத் மாநிலத்தில், 50 இலட்சம் பேருக்கு பி சி. ஜி சோதனை நடத்தப்பட்டது; 16 இலட்சம் பேருக்கு அந்த ஊசி போடப்பட்டது; இயக்கத்தின் பலன்கள், மனநிறைவு தரத்தக்கதாயுள்ளது," என்று, ஐதராபாத் சட்ட சபையில், அம்மாநில சுகாதார மந்திரி தெரிவித்துள்ளார்.

பெரம்பூர் இரயில் பெட்டி உற்பத்திச்சாலை

விசேட அம்சங்கள் குறித்து விளக்கம்

பெரம்பூர் இரயில் பெட்டி உற்பத்திச்சாலை போன்ற பிரம் மாண்டமான ஒரு தொழிற்சாலையின் நிர்மாண வேலையை விவரிப்ப தென்றால், அது, மிக நலன் பயப்பதாகவே இருக்கும். அதற்குத் திட்டமிட்டு, படங்கள் வரைந்து, ஆயிரக் கணக்கான ஆட்களைக் கொண்டு தீவிர வேலை செய்வித்து, சகல சங்கடங்களையும் சமாளித்து, குறித்த காலத்தில் அது வேலை செய்யத் தொடங்குமாறு வேலையைப் பூர்த்தி செய்த அத்தனை காட்சிகளும் கண்முன் வரும் போது புளகாங்கிதமேற்படத்தான் செய்யும்.

தொழிற்சாலையில், உற்பத்தி வேலை எந்தக் கிரமப்படி நடைபெற வேண்டுமோ அந்தக் கிரமத்தை ஒட்டியே பட்டறை வரிசைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் பத்துப் பட்டறைகள் இருக்கின்றன.

மூலப் பொருள்களையும், சாதனங்களையும் ஒவ்வொரு இடத்துக்கும் எடுத்துச் செல்வதற்கு உயரத்திலுள்ள பாரந் தூக்கிகள் (கிரேன்) உதவி செய்கின்றன; அவை பட்டறைகளுக்கு இடையிலுள்ள இடத்தில், சாதாரணமாக 80 அடி தூரத்துக்கு, அந்தச் சாதனங்களை எடுத்துச் செல்லும்; தொழிலாளர்களின் உடல் சிரமம் இதனுல் குறைந்துவிடுகிறது.

கட்டட சாமான்கள் சேகரிப்பு

கட்டட வேலைக்கான உருவ அமைப்பு விவரங்கள் முடிவு செய்யப்பட்டவுடன் கட்டட சாமான்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டது. 14,17,000 சதுர அடி 'ஆஸ்பெஸ்டாஸ்' சிமிட்டித் தகடுகள், 2,71,000 சதுர அடி கண்ணாடிப் பாளங்கள், 19,500 டன் சிமிட்டி, 200 டன் தறைவு ஆணிகள்—மரையாணிகள் வகையரு, 9,500 டன் உருக்குத் தகடு முதலிய எத்தனையோ சாமான்கள் தேவைப் பட்டன.

மொத்தம் 6,400 டன் 'கட்டுமான உருக்கு' (பாப்ரிக்கேட்டட் ஸ்டீல்) தேவைப்பட்டது; கூடிய மட்டிலும் உள்நாட்டு சாதனங்களையே உபயோகிக்க வேண்டும் என்ற கொள்கைப்படி, பல்வேறு நிறுவனங்களிடம் ஆர்டர் கொடுத்து, இந்த உருக்கு சாதனங்கள் சேகரிக்கப்பட்டன.

1952 செப்டம்பரில்தான் முதலாவது 'இரும்பு முளை' இறக்கப் பட்டது; அது முதல் மொத்தம் 2460 'முளை'கள் இறக்கப்பட்டுள்ளன; அவை ஒவ்வொன்றும் 40 அடி ஆழத்துக்குப் பதியவைக்கப் பட்டிருக்கின்றன.

'தொழில் உலகக் கோயில்'

இத்தொழிற்சாலையின் பிரதான பட்டறை, பல பாகங்களை ஒன்று சேர்த்து உருக்கொடுக்கும் பூட்டு பட்டறை (அசெம்பிளி ஷாப்) தான்; அது மிகவும் உன்னதமான ஒரு கட்டடம்; அதைத் 'தொழில் உலகக் கோயில்' என்று வர்ணித்தால் மிகவும் பொருந்தும். அதன் நீளம் 1,000 அடி; அகலம் 260 அடி; உச்சிவரை உயரம் 55 அடி; 33 அடி உயரத்தில் இயங்குகிற நான்கு 20 டன் பாரந் தூக்கிகளும், பல 5 டன் பாரந் தூக்கிகளும் தயாரிப்பு வேலைக்கு உதவியாக இருக்கின்றன; அகலத்தில், தூண்களுக்கிடையே இரண்டு 80 அடிச் சுவர்களும், இரண்டு 50 அடிச் சுவர்களும் உள்ளன.

பூமிக்குக் கீழ்........

மின்சாரக் கம்பிகள், டெலிபோன் கம்பிகள், அழுத்த வேகக் காற்றுக் குழாய், தண்ணீர் குழாய் ஆகியவைகளைக் கொண்டு செல்வதற்கு மடைகள் அமைக்கப்பட்டு, பூமி மட்டத்துக்குச் சமமாக மூடிகள் போடப்பட்டுள்ளன. கம்பிகள், குழாய்கள் எல்லாம் மடைகளிலேயே போகுமாதலால், தளம் நன்ருக இருக்கும்; இந்த நவீன முறைதான மேனுடுகளில் இப்போது கையாளப்படுகிறது.

பட்டறைகளுக்கிடையில், போக்குவரத்து காங்கிரீட் பாதைகளும், இரயில் பாதைகளும் இருக்கின்றன.

காரியாலயக் கட்டடம்

தொழிற்சாலையை அடுத்து ரூ. 14.93 இலட்சம் செலவில் நாலு மாடியுள்ள காரியாலயக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது இரும்புக் கம்பிகள் இறக்கி அஸ்திவாரமிட்டு, உருக்குச் சட்டம் நிர்மாணித்துக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. இக்கட்டிடம் முழுவதும், 'ஏர் கண்டிஷன்' முறையில் சம சீதன நிலையுள்ளதாக்கப்பட்டிருக்கிறது; இக் கட்டிடத்தின் தரைத்தள பரப்பளவு 59,252 சதுர அடி.

இரண்டடுக்குக் கட்டிடம் ஒன்றில் சிற்றுண்டிச்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

வேலை நடப்பதை மேற்பார்வையிடுவதற்கு வசதியாக, ஒவ்வொரு பட்டறையிலும் கூரை உயரத்தில் 'போர்மன்' நிலயம் ஒன்று இருக்கும்; அதன் சுவர்கள் கண்ணாடியால் அமைக்கப்படும்.

சிப்பந்திகள் குடியிருப்புக் கட்டடம்

தொழிற்சாலை வேலை நடக்கும் போதே, தொழிலாளர்கள் குடியிருப்புக்கான கட்டிடங்களும் நிர்மாணிக்கப்பட்டு வந்தன; அவைகளில், கட்டிட வேலைத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்யப்பட்டது. அதனுல், தற்காலிகமாகப் பல குடியிருப்புகளை அமைப்பதற்கு அவசியமில்லாமற் போயிற்று.

ரூ. 22.8 இலட்சம் செலவில் 33 ஏக்கரா மனையிடத்தில் கட்டப்பட்டுள்ள இந்தக் குடியிருப்புக்கும், சென்னை நகரத்துக்கும் சென்று வருவதற்குப் போக்குவரத்து வசதி நன்ருக அமைந்திருக்கிறது. மிகச் சிறிய வீட்டிலும்கூட சகல வசதிகளும் இருக்கின்றன; மின்சாரம், தண்ணீர் விநியோகம், பாதை, பூங்கா முதலிய சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

குடிதண்ணீருக்காக என்னூரிலிருந்து தண்ணீர் கொண்டு வரப் படுகிறது; அதற்கு ரூ. 11.5 இலட்சம் செலவாகியிருக்கிறது.

வயதுமுதிர்ந்தோருக்கு உபகாரச் சம்பளம்

"சமூகப் பாதுகாப்பு ஏற்பாடாக, வயது முதிர்ந்தோருக்கு உபகாரச் சம்பளம் தரும் திட்டம் ஏதும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தீட்டப்படவில்லை,"

என்று, தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

புதுடில்லி, செப். 30—

"சென்னை, பம்பாய், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது பற்றி இந்திய சர்க்கார் ஆலோசனை செய்து வருகின்றனர்," என்று, ராஜ்யங்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தச் செலவு விவரங்கள்

★

பெரம்பூர் முழு இணைப்பு இரயில் பெட்டி உற்பத்திச் சாலைக்கான மொத்தச் செலவு மதிப்பு ரூ. 7,35,15,000; அதன் விவரங்கள் வருமாறு:—

	ரூபாய்கள்
நிலம்	5,79,000
பட்டறைக் கட்டடங்கள் வெளி மதில்	1,32,30,000
பட்டறைகளுக்கு உள்ளே தண்ணீர் வசதி, மின்சார வசதி	17,45,000
சிப்பந்திகள் குடியிருப்புக் கட்டடங்கள் மின்சார, தண்ணீர் வசதிகள்	34,09,000
காரியாலய கட்டடம்	8,42,000
தண்ணீர் விநியோகம்	6,26,000
சாக்கடை வடிகால் திட்டம்	1,68,000
சிப்பந்திகள் சௌகரிய வசதிக்கான கட்டடங்கள்	3,60,000
பள்ளிக்கூடம் - தங்குமிடம்	10,48,000
இயந்திரங்கள், சாதனங்கள்	2,65,48,000
மின்சார இயந்திரங்கள்	56,22,000
திட்ட வேலை முழுமைக்கும் வேலைச் செலவு	82,40,000
திட்டம் முழுமைக்கும் வண்டிக் கூலி, சுமைக் கூலி	46,95,000
பூர்வாங்கச் செலவு, இரயில் தடம்	64,03,000
	7,35,15,000

★

நிர்மாணத் துறையின் புள்ளிவிவரம்:

நாட்டிலுள்ள முக்கியமான ஒரு தொழிற்சாலையாக அமைந்துள்ள பெரம்பூர் இரயில் பெட்டி தயாரிப்புச்சாலை சம்பந்தமான பல புள்ளி விவரங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன:—

தொழில் பட்டறைகளின் தளப் பரப்பளவு	8,48,600 சதுர அடி
கொட்டகைகள் எண்ணிக்கை	10
இத்திட்டத்திற்குத் தேவைப்பட்ட உருக்கு	9,500 டன்
உள்ளே போடப்பட்டுள்ள இரயில் பாதை நீளம்	12 மைல்
பட்டறைகளிலுள்ள பாதைகளின் நீளம்	3.4 மைல்
தொழிலாளர் குடியிருப்பின் பாதை நீளம்	3 மைல்
வீடுகள்	400 தொகுதிகள்
தண்ணீர் விநியோகக் குழாய் நீளம்	16 மைல்
சிமிட்டி உபயோகம்	19,500 டன்
தொழிற்சாலையிலுள்ள இயந்திரங்கள் எண்ணிக்கை:	
பொதுவானவை:	549
விசேட வேலைகளுக்கானவை	60
சட்டங்களும், பொருத்துமானங்களும் (ஜிக்ஸ், பிக்ஸ்சர்ஸ்)	750
குளிர வைப்பதற்கான தண்ணீர், எண்ணெய், காற்றுக் குழாய்கள் நீளம்	8.4 மைல்
அழுத்துவிசை சாதன சக்தி[கம்ப்ரசர்]	8,250 கன அடி[நிமிடத்துக்கு]
பாரந்தூக்கி சாதனங்களும், இடம் மாற்றும் சாதனங்களும் [கிரேன்ஸ், டிராவர்சர்ஸ்]:	
[அ] உயரத்திலுள்ள 20 டன் கிரேன்:	4
[ஆ] உயரத்திலுள்ள 5 டன் கிரேன்	26
[இ] இடமாற்று சாதனம் 75 டன்	2
தொழிலாளர் எண்ணிக்கை	4,000
ஒரே [ஷிப்ட்] விடுதி விகிதம் வேலை நடந்தால் உற்பத்தி	850 இரயில் பெட்டிகள்
மின்சார உபயோகம் வருடமொன்றுக்கு	60 இலட்சம் யூனிட்டு
திட்டத்துக்கான மொத்தச் செலவு	ரூ. 7.35 கோடி

வேதங்களை ஒலிப்பதிவு செய்வார்களாம்!

அகில இந்திய வானொலி மேற்கொள்ளும் 'பணி'!

காசி, செப். 30—

அகில இந்திய வானொலியினர், வேதங்களை, வேதியர்களைக் கொண்டு பாராயணம் செய்யச் செய்து அவற்றை ஒலிப்பதிவு செய்வர் என்று தெரிய வருகிறது.

ரிக் வேதம், சாம வேதம் ஆகியவற்றின் குறிப்பிட்ட சில பகுதிகள் முதலில் ஒலிப்பதிவு செய்யப்படுமாம்.

'வேத பாராயண'த்திற்கு ஒரு ஆதாரமான தரம் நிர்ணயிக்க வேண்டுமென்பதற்காகவும், ஒரு நிரந்தரப் பதிப்பு வேண்டும் என்பதற்காகவும் இந்த ஒலிப்பதிவாம்.

இதற்காக நாடெங்கணுமுள்ள முக்கியமான வேதியர்களின் துணை நாடப்பட்டிருக்கிறதாம்.

காசி வேதியர்கள் ஒத்துழைக்கக் கேட்கப்பட்டிருக்கின்றனராம்!

வேத விற்பன்னர்களின் மாநாடு ஒன்று, வேதங்களின் எந்தப் பகுதியை ஒலிப்பதிவு செய்வது என்பதை நிர்ணயிப்பதற்காகப் புதுடில்லியில் கூடும் என்றும் கூறப்படுகிறது.

சுபாஷ் போஸ் மரண எதிரொலி!

இந்தியாவின் நிலை பற்றி பிரதமர் நேரு விளக்கம்

புதுடில்லி, செப். 29—

மக்கள் சபையில், சுபாஷ் சந்திர போஸ் மாண்டது பற்றிய பிரச்சினைகள் மீண்டும் எழுந்தது; கேள்விகளுக்குப் பதிலளித்து, பிரதமர் நேரு சொன்னார்:—

சுபாஷ் போஸ் மரணமடைந்தார் என்பது பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை; எத்தகைய சந்தர்ப்பத்தில்—நிலைமையில் அவர் மரணமடைந்தார் என்பது தெளிவாகத் தெரியாமலிருக்கலாம்; இந்தப் பிரச்சினையில், ஜப்பான் சர்க்கார்தான் திருப்திகரமான விசாரணை நடத்த முடியும்; அவ்வாறு விசாரணை நடத்துவதற்கு அவர்கள் முன்வந்தால், நம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்குச் செய்வோம்; விசாரணை நடத்தப்பட்டால், அதிகமான விவரங்கள் வெளியாகக்கூடும்; இதில் சம்பந்தப்பட்டுள்ள முக்கியமான சாட்சிகள், ஜப்பானிய சர்க்கார் அதிகாரிகளாகவோ, சர்க்காரில் சம்பந்தப்பட்டவர்களாகவோ இருப்பதால், அவர்களுடைய நாட்டில் நாம் தலையிடுவது சாத்தியமில்லை;

'சுபாஷ் சந்திர போசின் 'எலும்பு'களை இந்தியாவுக்குக் கொண்டு வருமாறு ஜப்பான் சர்க்காரையோ, ரெஸ்கோஜி கோயில் நிர்வாகிகளையோ இந்திய சர்க்கார் கேட்கவில்லை; இந்தப் பிரச்சினையில், போஸ் குடும்பத்தினரின் ஒப்புதலின்றி எதுவும் செய்யக் கூடாதென இந்திய சர்க்கார் எண்ணுகின்றனர்!

14 நாகர்கள் கொல்லப்பட்டனர்

கிராமவாசிகள் தாக்குதல்?

தீவிரவாதிகளான நாகர்கள் ஆயுத சகிதம் தங்களைத் தாக்க வந்தபோது வடகிழக்கு எல்லை 'ஏஜென்சி'யில் உள்ள துயென்சாங் பகுதியிலிருக்கும் 15 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2,000 கிராமவாசிகள், எதிர்த்துத் தாக்கிய 14 நாகர்களைக் கொன்றுவிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

முதன் முறையாக இப்போதுதான், கிராமவாசிகள், நேரடியாக நாகர்களை எதிர்த்துத் தாக்கியிருக்கின்றனர்.

பெரானின் 'பொக்கிஷம்'

2 கோடி டாலர்

பியூனஸ் அயர்ஸ், செப். 30—

"தங்க நாணயங்களாகவும், பாங்கி நோட்டுகளாகவும், சுமார் 2 கோடி டாலர் பெறுமான பொக்கிஷம், துரத்தப்பட்ட அர்ஜெண்டைன் குடியரசுத் தலைவரான பெரானின் மாளிகையிலிருந்து கைப்பற்றப்பட்டது" என்று வெளிவந்த செய்திகளை போலீசார் ஊர்ஜிதம் செய்திருக்கின்றனர்

'ஜீப் கார் பேர ஊழல்'

சர்க்கார் விசாரணை நடத்த மாட்டார்களாம்!

புதுடில்லி, செப். 29—

"ஏழாண்டுகளுக்கு முன்பாக, லண்டனில், தற்காப்பு இலாகாவிற்கான சாமான்களும், 'ஜீப் கார்'களும் வாங்கிய பேரங்கள் பற்றி இனி தொடர்ந்து விசாரணை நடத்துவதில்லை,"

என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதாக டாக்டர் கே. என். கட்ஜு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பேரங்களில் நடைபெற்ற ஊழல்கள் குறித்து, பொதுக் கணக்குக் குழு தகவல் தந்திருந்தது.

"பொது நலன் கருதி, இந்த விசாரணை முடிந்ததாகக் கருதப்படவேண்டும்; இது குறித்து பொதுக் கணக்குக் குழுவிற்கும் சர்க்கார் தகவல் அனுப்பிவிட்டனர்,"

என்றும் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

பல எதிர்க் கட்சியினர், 'இது குறித்து சபை விவாதிக்க வேண்டும்,' என்று கூறியிருக்கின்றனர்.

"ஒரு தீர்மானம் குறித்து விவாதிப்பதிலேயே, ஜனநாயகம் வெற்றி பெற முடியாது; விட்டுக்கொடுப்பதின் மூலம் தான் முடியும்; பொதுக் கணக்குக் குழு, இந்த சபை நியமித்த மிக முக்கியமான குழுவாகும்; அதனைச் சர்க்கார் வெகுவாக மதித்திருக்கின்றனர்; ஆனால், சர்க்காருக்கும் — குழுவிற்கும் ஏதோ கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது; எனவே, அந்த வேறுபாட்டை, இந்த சபையில் விவாதிப்பதைவிட, வேறு இடத்தில் விவாதிப்பதே நல்லது,"

என்று, சபைத் தலைவர் மாவ்லங்கர் தெரிவித்திருக்கிறார்.

'முகவரி' இல்லாமல் 300 கடிதங்கள்!

பூனா, செப். 30—

முகவரி எழுதப்படாமலேயே தினம் சராசரி இந்தியா முழுமையிலும் சுமார் 300 கடிதங்கள் வரை தபால் நிலையத்தில் அஞ்சலுக்காகச் சேர்கின்றனவாம்.

இவற்றில் சில விலையுயர்ந்த பொருள்கள்கூட கொண்டவையாயிருக்கின்றனவாம்.

பம்பாய் நகருக்கு மட்டும் தினம் 5 இலட்சம் கடிதங்கள் வருகின்றனவாம்! இவற்றில், அதுபட்டுவாடா செய்யப்படவேண்டிய அஞ்சல் நிலையத் தொடர் எண் இல்லாமல் வரும் கடிதங்கள் 55 சத விகிதமாம்!

பம்பாயில் அஞ்சலுக்காக அனுப்பப்படும் கடிதங்களில் 70 சத விகிதத்திற்கு மேல், மாலை 5 - முதல் 8 மணிக்குள் அஞ்சலில் சேர்க்கப்படுபவையாம்!

ஆயிரத்தில் குறைந்தது ஆறு கடிதங்களேனும் பட்டுவாடா செய்யப்பட முடியாத நிலையில், அதற்கென்றுள்ள நிலையத்திற்கு அனுப்பப்பட்டுவிடுகின்றனவாம்!

இந்தத் தகவலை, பம்பாய் வட்ட தபால் நிலைய தலைமை அதிகாரி இங்கு தெரிவித்திருக்கிறார்.

நாட்டுப் பிரிவினை கோருகிறது நாடு!

கழக ஆண்டு விழா கொண்டாடினர் திராவிடர்!

★

இத்திங்கள் 17—23-ந் தேதி வரையிலுள்ள ஒரு வார காலத்தைத் திராவிட நாடு பிரிவினை வாரமாகவும், தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவாகவும் கொண்டு விழா நடத்துமாறு தி. மு. கழகத் தலைமை நிலையம் விடுத்த வேண்டுகோளின்படி, நாடெங்குமுள்ள தி. மு. கழகங்களும், உட்கிளைக் கழகங்களும் விழாக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தியும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் கொண்டாடியுள்ளன.

"பிரிந்துபோகும் தனி உரிமையோடு கூடிய தமிழகம்—ஆந்திரம்—கர்நாடகம் (துளுவம் உட்பட)—கேரளம் ஆகிய பகுதிகள், மொழிவழியிலும், தேவையான மாநில உரிமைகள் வழியும் தனித் தனிப் பிரிந்து, வெளிநாட்டு—வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு, வடநாட்டு அரசியல் ஆதிக்கத் தடுப்பு, வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத் தடுப்பு, வாணிபம், போக்குவரத்துப் பற்றுக்கோடுகள், தபால்—தந்தி, உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, நாணயச் செலாவணி, இன்னபிற வழிகளில் குறைந்த அளவுத் திட்டத்தில், ஒன்றுபட்ட சுதந்திரச் சமதர்மத் திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியை அடைய நாம் அனைவரும் பாடுபடுவோமாக"

என்ற தீர்மானத்தையும் அவைகள் ஒரேமனதாக நிறைவேற்றியுள்ளன. நாடெங்கும் நடைபெற்ற மேற்படி விழாச் செய்திகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன:—

சேலம் நகர்

18—9—55 காலை 9 மணிக்கு, 2-வது வட்டம் கொமாரசாமிபட்டி தி. மு. கழகச் சார்பில், கழகத்தில் கொடியேற்றி வைக்கப்பட்டதுடன், குழந்தைகளுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டன.

காலை 9 மணிக்கு, 30-வது வட்டம் கருங்கல்பட்டி தி. மு. கழகச் சார்பில் தோழர் அ. சன்ராசு அவர்களால் கழகக் கொடியேற்றி வைக்கப்பட்டு, சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

அன்று காலையில் 4-வது வட்டம் அரிசிபாளையத்தில், பல தெருக்களில் கழகக் கொடியேற்றி வைக்கப்பட்டு, சிறுருக்கு மிட்டாய்கள் கொடுக்கப்பட்டன. காலை முதல் ஒலி பெருக்கி வைத்து விழா நிகழ்ச்சியை தோழர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அன்று மாலை 6-30 மணிக்கு, கிருஷ்ண செட்டித் தெருவில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் அன்புக்கரசு, நடராசன் ஆகியோர் பேசினர்.

* * *

21—9—55 காலை 10 மணிக்கு, 8-வது வட்டம் தி. மு. கழகச் சார்பில் தோழர் இ. ஆர். கிருஷ்ணன் அவர்களால் கொடியேற்றி வைக்கப்பட்டதும், சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

* * *

23—9—55 காலை 22-வது வட்டம் அம்மாப்பேட்டை காந்தி மைதானத்தில், கொடியேற்றப்பட்டது. மாலை 6 30 மணிக்கு, நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் இ. எ. ஆர். ரங்கநாதன் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஆறுமுகம், ப. முருகன், அன்புக்கரசு, அ. சுப்பிரமணியம், கே. எஸ். அமுர்தம், இ. ஆர். கிருஷ்ணன், கே. எ. கலையழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அன்று காலை 9 மணிக்கு 13-வது வட்டம் கல்லாங்குத்து தி. மு. கிளைக் கழகத்தில் கழகக் கொடியேற்றப்பட்டு ஏராளமான பள்ளிச் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இரவு 10-மணிக்கு, மேற்படி கழக முன்னிலையில் இசை விருந்தும் நடைபெற்றது. தோழர் இ ஆர் கிருஷ்ணன் அவர்களால் இசை விருந்து அளித்த தோழர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். இறுதியில் தோழர் அ. சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றினார்.

* * *

25—9—55 காலை, 7-வது வட்டம் தி மு கழகத்தின் சார்பில் கொடியேற்றி வைக்கப்பட்டது. மாலை 6-30 மணிக்கு, சந்தைப் பேட்டைக்கு எதிரில் தோழர் வை. முத்தியாலு தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் இ. ஆர். கிருஷ்ணன், கே. எஸ். அமுர்தம், அன்புக்கரசு, ஜி. பி. சோமசுந்தரம், சிற்றுளி சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அன்று காலை 9-வது வட்ட தி மு கழகத்திலும் மற்றும் பல இடங்களிலும் கழகக் கொடியேற்றப்பட்டது.

தேனி

21—9—55 காலை 9 மணிக்கு, மணிக்கூண்டு அருகிலுள்ள கொடிக் கம்பத்தின்கீழ் அமைந்திருந்த அரங்கில், தோழர் பி. பி. துரைராசன் தலைமையில் கிளைக் கழகச் செயலாளர் கொடி ஏற்றினார். பின்னர் தோழர்கள் சோ. வெற்றிஅரசு, ஆ. கருப்பையா மற்றும் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். அன்றையத் தினம் முழுவதும் ஒலி பெருக்கி மூலம் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

குன்றத்தூர்

21—9—55ல், தோழர் டி. கே. சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் 7 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் தோழர்கள் சைதை. சம்பந்தம், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சோழவந்தான்

22—9—55 இரவு 8 மணிக்கு, தோழர் தா. ஆவுடையப்பன் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் தில்லை-வில்லாளன், பரமசிவம், எஸ். செல்லத்துரை, வி. செங்குட்டுவன், மா. வேலன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மேற்படி விழாவை யொட்டி, ஊரின் பல இடங்களிலும் தோழர் தில்லை-வில்லாளன் கழகக் கொடிகளை ஏற்றிவைத்தார்.

வேலூர்—சேலம்

23—9—55 காலை வேலூரில் முக்கிய இடங்களில், தோழர்கள் லோ. கருப்பையா, கே ராசலிங்கம், எஸ். நாசு, கி. அரங்கன், எம். கருப்பண்ணன், வி. எ. இராமநாதன் ஆகியோரது இல்லங்களில் தி. மு. கழகக் கொடிகள் ஏற்றியும், துண்டு விளம்பரங்கள் வெளியிட்டும் ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கு. பெரியமருதூர்

23—9—55ல், சிறப்புறக் கொண்டாடப்பட்டது மாலை 7 மணிக்கு, சாவடி மைதானத்தில் தோழர் சின்னசாமி தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர் இரா. இராமசாமி கழகக் கொடியை ஏற்றி வைத்தார். தோழர்கள் லோ. கருப்பையா, சி. வே. வேலப்பன், வி எ. இராமநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ம. புதுப்பட்டி

23—9—55ல், தோழர் க. நல்லுசாமி தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் சிறப்புற நடைபெற்றது. தோழர் வாசு கழகக் கொடி ஏற்றிவைத்தார். சிறுவர்களுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டன. பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை-திருவல்லிக்கேணி

25—9—55 மாலை 4 மணியளவில், கே எஸ் பாண்டியன் படிப்பகச் சார்பில் தோழர் கா. அப்பாதுரை தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் மா. பா. சாரதி அவர்களால் ஓவியக் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. தோழர் மு. பழனி கழகக் கொடியேற்றினார். தலைமை உரைக்குப் பின்னர், தோழர்கள் இளம்பரிதி, எம். கே. மணி, கோ தாமோதரன், மா. பா. சாரதி, செழுமாறன், கபிலன், ஏ. கே. நடராசன், பூ. அரங்கசாமி ஆகியோர் 'திராவிட நாடு பிரிவினை' குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

திருத்துறைப்பூண்டி

27—9—55 மாலை 6 மணியளவில், திருத்துறைப்பூண்டி வாணக்காரத் தெருவில், மஜீத் மன்றத்தின் சார்பில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் என். எஸ். இளங்கோ திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

சென்னை 5-வது வட்டம்

28—9—55 காலை, கழக இல்லத்தில் கொடி ஏற்றப்பட்டு, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது. மாலை 6 மணிக்கு சிறுவர்களுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டதுடன், உறுப்பினர்களுக்குத் தேனீர் விருந்தும் அளிக்கப்பட்டது. பின்னர், தோழர் இராம. சுப்பையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், முன்னாள் மாவட்டச் செயலாளரைப் பாராட்டியும், மாவட்டப் பிரதிநிதிகளுக்கு கருத்துரையும் வழங்கிப் பேசிய அண்ணா அவர்களின் சொற்பொழிவும், தோழர் ஈ. வெ. கி. சம்பத், கோமளீஸ்வரன் பேட்டையில் நிகழ்த்திய சொற்பொழிவும், தோழர் எஸ் எஸ். பி. லிங்கம் அவர்களால் ஒலிபரப்பப்பட்டது. பிறகு, தோழர் லோகநாதன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

கழகத் தோழரின் கண்ணியம்!

ம. புதுப்பட்டியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள், தாங்கள் குடிப்பதற்காகத் தண்ணீர் இறைத்துக்கொள்ளும் கிணறு, தற்போது வறண்டு, தண்ணீரில்லாமல் துன்புற்று, தங்களுக்கு எவ்வகையிலாயினும் குடிதண்ணீர் வசதி செய்து தரும்படி இவ்வூர் தி. மு. கழகத்தினரைக் கேட்டுக்கொண்டனர்.

தண்ணீர் கிடைக்காமல் துன்புறும் தாழ்த்தப்பட்ட மக்களை, தமது சொந்தக் கிணற்றிலேயே தங்களுக்குத் தேவையான குடிதண்ணீரை மொண்டுகொள்ள, இவ்வூர் தி. மு கிளைக் கழகச் செயலாளர் தோழர் க. நல்லுசாமி அனுமதித்திருக்கிறார். (ச-கி.)

மாணவர்கள் மறியல்

ஒருமாத காலத்திற்கு மூடியிருக்கும்—என்று, கடந்த புதன்கிழமை அன்று அறிவிக்கப்பட்டுள்ள அலகாபாத் பல்கலைக் கழகம், திரும்பவும் உடனடியாகத் திறக்கப்படும் என்று உறுதி மொழி தருமாறு கோரி துணைவேந்தர் பி. என். ஜா இல்லத்தின்முன்பு கூடி, மூன்று பல்கலைக் கழக மாணவர்கள் 'அமைதியான' மறியல் நடத்தியிருக்கின்றனர்.

'இந்தியா துண்டாடப்படாமல் இருக்க!'

'அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்'

தோழர் முத்துசாமி வல்லத்தரசு கருத்து

இந்தி திணிப்பு பற்றி மக்கள்சபை உறுப்பினர் மாநாடு

புதுடில்லி, அக். 2—

"இந்தியாவின் அலுவல் மொழியாக இந்தி ஏற்றுக்கொள்வதற்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கிற 15 ஆண்டுக் காலம் போதுமானதல்ல; இந்தியாவின் 'ஒற்றுமை' காப்பாற்றப்பட வேண்டுமானால், காலவரையறை நீடிக்கப்படவேண்டும்; அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்; மக்கள் சபை உறுப்பினர்கள் பலர், இதுபற்றி கருத்தறிவித்திருக்கின்றனர்;

"வரும் நவம்பர் திங்களில் மக்கள் சபை மீண்டும் கூடும்போது, இந்தி மொழி வழங்காத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்கள் எல்லாம் ஒன்றுகூடி, மாநாடு ஒன்று நடத்தி இதுபற்றி ஆலோசிப்பர்; அரசியல் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருவது பற்றி அவர்கள் முடிவெடுப்பார்கள்,"

—என்று தமிழ் நாடு ம. சோ. கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினரான முத்துசாமி வல்லத்தரசு தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"அலுவல் மொழிக் குழுவின் செலவுக்காக உபமானியக் கோரிக்கை பற்றி அண்மையில் மக்கள் சபையில் நடந்த விவாதம் இந்தி வழங்காத பகுதி மக்களின் தேவைகளையும், கஷ்டங்களையும், உயர்ந்த அதிகாரம் படைத்த நிலையிலிருப்போர்கூட உணரவில்லை என்ற வருந்தத்தக்க உண்மையை உணர்த்தியிருக்கிறது;

"இந்திய 'ஒற்றுமை' காப்பாற்றப்பட வேண்டுமானால், அரசியல் சட்டம் திருத்தப்பட்டே ஆகவேண்டும்."

இறந்தவர் உடலை எரிப்பதற்கு எதிர்ப்பு

மக்கள் சபையில் தனி நபர் தீர்மானம் நிராகரிப்பு

புதுடில்லி, செப். 30—

"எல்லாப் பிரிவினரும், இறந்தவர்களின் சடலங்களைக் கட்டாயமாக எரியூட்டவேண்டும்; இது தான் சுகாதாரத்திற்கு ஏற்றதாகும்; இதுபற்றி, மக்கள் கருத்தை அறியவேண்டும்," என்று குறிப்பிடும் ஒரு மசோதாவை, தனி நபர் ஒருவர் மக்கள் சபையில் கொண்டு வந்தார்.

மசோதாவை உறுப்பினர் பலர் எதிர்த்தனர்; பின்னர், சபை மசோதாவை நிராகரித்துவிட்டது.

2-வது திட்டம்

விவசாய அமைச்சர் தகவல்

புதுடில்லி, செப். 30—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில், உணவுத் தானிய உற்பத்தி ஒரு கோடி டன் அதிகரிக்கப்படுமாம்—இது, 1955–56ம் ஆண்டு உற்பத்தியைவிட 15 சதவிகிதம் அதிகமாம்.

சிறிய-பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களால் உபரியாக 2 கோடி ஏக்கராக்களுக்குப் பாசன வசதி கிடைக்குமாம்.

மத்திய டிராக்டர் நிறுவனம் மட்டும் 10 இலட்சம் தரிசு நிலங்களை மீட்குமாம்; மாநிலங்களும், கணிசமான தரிசு நிலங்களை மீட்குமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

கிராமங்கள் கடன் வசதி நிறுவனங்களைத் திருத்தி அமைப்பதின் மூலம் உழவர் பெருமக்களுக்கு ரூ. 225 கோடிக்குக் கடன் வசதி கிடைக்குமாம்.

தி. மு. க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் கவசம்பட்டு வருகை

8—10—55 மாலை 4 மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, கவசம்பட்டு (வ. ஆ.) பஞ்சாயத்து போர்டு சார்பில் வரவேற்பளிக்கப்படும்.

மாலை 6 மணிக்கு, தோழர் கே. பி. நவகோடி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், முல்லை சத்தி ஆகியோர் பேசுவர். அதுபோது மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

மாணவர் கிளர்ச்சி

அனுதாப வேலை நிறுத்தம்

அலகாபாத், அக். 1—

எட்டு மாணவர்கள் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டதை எதிர்த்து பல்கலைக் கழக மாணவர்கள் செய்துவரும் கிளர்ச்சிக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு, எல்லா வியாபார நிறுவனங்களும் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டதின் விளைவாக, மக்களின் அன்றாட வேலைகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டதாம்.

நிர்ப்பந்த முறைகளைக் கைவிட்டுவிட்டால் மாணவர்களுக்கு உதவி செய்யத் தயாராக இருப்பதாக கவர்னர் கே. எம் முன்ஷி செய்தி ஒன்று அனுப்பியுள்ளாராம்.

'பொருளாதார நெருக்கடி ஏற்படும்'

வர்த்தக கழகக் கூட்டத்தில் எச்சரிக்கை!

கல்கத்தா, செப். 30—

"கடந்த காலத்தில் இந்தியாவின் போக்கு-வரத்துத் தேவைகள் வெகுவாகக் குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கின்றன; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலேனும் இரயில், சாலைப் போக்கு-வரத்துக்கள் மிக விரிவாக்கப்பட வேண்டும்; இன்னும் சில ஆண்டுகளுக்குள் இப்போதைய பற்றுக்குறை மாற்றப்படாவிடில், நாட்டில் ஒரு பெரும் ஆபத்தான பொருளாதார நெருக்கடி ஏற்படும்,"

என்று, இந்திய வர்த்தகக் கழகக் கூட்டத்தில், என். எல். கனோரியா பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில் சொன்னார்:—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை பொறுத்தவரையில், அதிகமான பேர்களுக்கு வேலைதரக் கூடிய தொழில்களை அதிகமாக்குவதும், தொழிற்சாலையில் வாழ்க்கைத் தேவைகளுக்கான பொருள்களின் உற்பத்தியைக் கவனிக்காது விடவும் திட்டமிட்டிருக்கின்றனர்; குடிசைத் தொழில்களுக்கு, நாட்டில் ஏராளமான வாய்ப்பு இருக்கும்போது, பெரும் தொழில்களைக் காட்டிலும் குடிசைத் தொழில்களின் அபிவிருத்தியில் அதிக அக்கரை காட்டுவது, நாட்டின் பொருளாதார நலனுக்கு எந்த வகையில் உகந்தது என்பது தெரியவில்லை;

"வேலைகள் அதிகமான வருமானத்தைப் பெற்றுத்தர வேண்டும்; மேலும், உற்பத்தியான பொருள்கள் அதிகமாகச் செலவானால்தான் மேலும் மேலும் பலருக்கு வேலைதர முடியும்; வேலை தருவது, உற்பத்தியில் பற்றுக் குறையை உண்டாக்குமானால்—வருமானத்தைக் குறைக்குமானால், அதனை நாம் தாங்கிக்கொள்ள இயலாது."

பாம்புக்குப் பலியாகவிருந்த பெண்

பூனை காப்பாற்றியது!

சையதுபூர், அக். 2—

பாம்பு ஒன்றுக்குப் பலியாகவிருந்த பெண் ஒருவர், பூனை ஒன்றினால் காப்பாற்றப்பட்ட செய்தி கிடைத்திருக்கிறது.

இங்குள்ள பாபுபாரா பகுதியில், வீடு ஒன்றில், தரையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார் பெண் மணி ஒருவர்.

படமெடுத்து ஆடி சீறிக்கொண்டே நல்ல பாம்பு ஒன்று அவரை நெருங்கிற்று; இதனை, கயிறுக் கட்டில் ஒன்றில் படுத்திருந்த அந்தப் பெண்ணின் மகனும் கவனித்திருக்கிறான்.

இந்த நேரத்தில், பூனை ஒன்று மெதுவாகக் குரல் கொடுத்திருக்கிறது; உடனே, சப்தம் வந்த திசையில் பாம்பு கவனத்தைச் செலுத்தியதாம்!

பூனை மிரள விழித்துக் கொண்டே அசையாமல் உட்கார்ந்துகொண்டிருந்ததாம்; பாம்பும், பூனையை முறைத்தவண்ணம் சில நிமிட நேரம் வரையில் படமெடுத்தாடிக் கொண்டிருந்ததாம்; இதற்கிடையில் பெண் எழுந்து அறையை விட்டு வெளியேறி சத்தம் போட்டதும், அக்கம்பக்கத்திலிருந்தோர் ஓடிவந்து பாம்பை அடித்துக் கொன்றிருக்கின்றனர்.

சென்னையில் 'சர்க்கா' உற்பத்தி தொழிற்சாலை?

பரிசீலனை செய்யப்படுகிறது?

சென்னை, அக். 1—

சென்னை நகரில், 'சர்க்கா'க்கள் உற்பத்திக்காகத் தொழிற்சாலையொன்று நிறுவுவது பற்றி மாநில சர்க்கார் பரிசீலனை செய்துவருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை சர்க்கார் ஆதரவின் கீழ், 5 இலட்சம் சர்க்காக்கள் உற்பத்தி செய்யப்படுமாம்; அவை, 'அம்பர் சர்க்கா'க்கள் மாதிரியில் அமையக் கூடுமாம்.

உருக்கு விலை உயர்வு

புதுடில்லி, செப். 30—

அந்நிய நாடுகளிலிருந்து அதிக அளவு உருக்கு இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதாலும், உலக நாடுகளின் விலைக்கும் இந்தியாவின் விலைக்குமுள்ள வித்தியாசத்தைக் குறைக்கவும், இந்திய உருக்கின் சராசரி விலை டன்னுக்கு சுமார் ரூ 80 உயர்த்தப்படுமாம். தற்போதைய விலை ரூ 420; புதிய சராசரி விலை ரூ. 500; புதிய விலை இன்று முதல் அமுலாகிறது.

'டால்மியாவின் மோசடி இரண்டாவது முறையா?'

மக்கள் சபையில் கேள்விக் கணைகள்

புதுடில்லி, அக். 2—

"கைது செய்யப்பட்டுள்ள இராமகிருஷ்ண டால்மியாவின் மருமகன், டால்மியா மோசடி செய்துவிட்ட ரூ 2 கோடியையும் தந்துவிடுவதாகக் கூறியுள்ளதை இன்னும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை,"

என்று, மக்கள் சபையில், நிதி மந்திரி தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

இதைத் தொடர்ந்து மேலும் பல கேள்விகளுக்கு அவர் பதில் தந்திருக்கிறார்:—

"கடந்த இரண்டாண்டுகளில், இப்போது குற்றஞ் சாட்டப்பட்டுள்ள மோசடி இரண்டாவது முறையாக நடைபெற்றதா?" என்று பெரோஸ் காந்தி கேட்டதற்கு, 'இல்லை' என்று அவர் கூறியிருக்கிறார்.

"இரண்டாண்டுகளுக்கு முன்; ரூ 1,60,00,000 வரை மோசடி செய்யப்பட்டதும், பின்னர், 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழ் வெளியிடுபவர்களான பென்னட் கால்மன் நிறுவனத்தார், அந்தத் தொகையை ஈடுகட்டுமாறு சர்க்கார் வற்புறுத்தியதும் உண்மைதானா?" என்று பெரோஸ் காந்தி கேட்டபோது, 'அது மோசடி செய்யப்பட்ட தொகை அல்ல,' என்று நிதி மந்திரி கூறியிருக்கிறார்.

'பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்திற்கு ஏதேனும் பணம் தர வேண்டியிருந்தால் உடனே தந்துவிடுமாறு பென்னட் கால்மன் நிறுவனத்தை சர்க்கார் விசாரணைக்குப் பிறகு கட்டாயப்படுத்தியது உண்மைதானா?' என்று மீண்டும் பெரோஸ் காந்தி கேட்டபோது, நிதி மந்திரி தேஷ்முக், 'அது ஒரு சந்தேகமான கணக்கு வழக்கு என்று விசாரணையின்போது தெரியவந்தது; உடன் கணக்குகளை ஒழுங்குபடுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு சர்க்கார் உத்தரவிட்டனர்' என்று தெரிவித்தார்.

பத்திரிகைகளின் சிறிய தலைப்புகளில் 'டால்மியா பதுக்கப்படுவதேன்?'

புதுடில்லி, அக். 2—

பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான சர்க்கார் 'செக்யூரிட்டி' பத்திரங்கள் சுமார் 2 கோடி பெறுமானவற்றை மோசடி செய்ததாக இராமகிருஷ்ண டால்மியா கைது செய்யப்பட்டதை வடநாட்டுப் பத்திரிகைகளும், தேசீய ஏடுகளும் எங்கோ ஒரு மூலையில் பிரசுரித்து, அந்தச் செய்திக்கு முக்கியத்துவம் தராமல் செய்துவிடுவதின்மூலம், டால்மியாவின் 'கண்ணிய'த்தைக் காப்பாற்றிவிட நினைத்தனபோலும்!

அது குறித்து, பண்டித நேருவின் மருமகனான பெரோஸ்காந்தி, மக்கள் சபையில், 'பத்திரிகைகளின் சிறு சிறு தலைப்புகளுள் டால்மியா பதுங்கிக்கொள்ளுவதைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றனர்?' என்று, சிரிப்புக்கிடையே பிரதமர் நேருவைக் கேட்டார்.

உடனே பிரதமர் நேருவும், 'உறுப்பினர் பத்திரிகைகளைப் பற்றிக் கேட்கிறார்; பெரிய தலைப்புகளில் அந்தச் செய்தியைத் தாராளமாக உறுப்பினர் பிரசுரித்துக் கொள்ளலாம்' என்று பதிலிறுத்திருக்கிறார்.

தாம்பரம்-விழுப்புரம் சென்ட்ரல்-அரக்கோணம் இரயில் போக்கு வரத்து

மின்சார மயமாகுமென அமைச்சர் கருத்து

சென்னை, செப். 30—

தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரை மின்சார இரயிலை பரவலாக்குவதற்கான இறுதி மதிப்பீடுகள், நடப்பு நிதிஆண்டு கடைசிக்கு முன் (அடுத்த ஆண்டு வரவு-செலவு திட்டத்திற்கு முன்) பூர்த்தி செய்யப்பட்டுவிடுமாம்.

இதற்கு ரூ. 3½ கோடி செலவாகுமாம்.

சென்னை சென்ட்ரல்—அரக்கோணம் பிரிவை மின்சார மயமாக்கும் வேலையும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்வதற்கு முயற்சிக்கப்படுகிறது; இந்தத் திட்டத்திற்கு ரூ. 8 கோடி செலவாகுமாம்.

பர்மா தரவேண்டிய கடன் தள்ளுபடி!

"இந்தியாவுக்குப் பர்மா தரவேண்டிய பாகிக்கடன், கொழும்புத் திட்டத்தின் கீழ், பர்மாவுக்கு இந்தியா அளிக்கும் நிதி உதவியாகப் பாவிக்கப்படும்—அதாவது, அந்தக்கடன் ரத்து செய்யப்படும்," என்று, நிதி மந்திரி தேஷ்முக், மக்கள் சபையில் தெரிவித்தார்.

ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

பிரச்சினை பரிசீலனையில் இருந்து வருகிறதாம்!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையொட்டி, ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தும் பிரச்சினை, சர்க்காரின் பரிசீலனையில் இருந்துவருகிறது; ஆனால் 'பஞ்சப்படி'யை உயர்த்தும் பிரச்சினை கிடையாது," என்று, சென்னை மேல் (சட்ட) சபையில் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டிராம் தொழிலாளர் மனுக்கள் பரிசீலனை

சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகிறதாம்

"நிறுத்தப்பட்டுவிட்ட டிராம்வே கம்பெனியின் முன்னாள் தொழிலாளர்களின் சார்பில் ஆக. 28-ல் ஒரு மனுவும், செப். 15-ல் ஒரு மனுவும் சர்க்காரிடம் தரப்பட்டது; இதை சர்க்கார் பரிசீலனை செய்து வருகின்றனர்; டிராம் கம்பெனி கலைக்கப்படவிருக்கிறது; அப்போது தீர்க்கப்படும் கணக்கு வழக்குகளில் தொழிலாளர்களுக்கு முதல் சலுகை தர வேண்டுமென்பதை வற்புறுத்த சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகிறது," என்று, சட்ட (மேல்) சபையில் விவசாய மந்திரி தெரிவித்துள்ளார்.

சதி வழக்கு எதிரிகள் விடுதலை செய்யப்படுவர்

கராச்சி, அக் 3—

"இராவல்பிண்டி சதிவழக்கில் தண்டனை அடைந்த எதிரிகளின் பாக்கித் தண்டனை காலத்தை 'வஜா' செய்து, அவர்களை விடுதலை செய்யுமாறு பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலுக்குச் சர்க்கார் சிபாரிசு செய்யும்," என்று, பாகிஸ்தான் அ. நி சபையில் சட்ட மந்திரி சந்திரிகார் அறிவித்துள்ளாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.